


மழை என்றால் பேய் மழை. குடைகள் பிய்ந்து பறந்துகொண்டிருந்த பிசாசு மழை. மும்பை நகரமே ஒரு மாபெரும் குட்டை போலிருந்த சமயம் அது. சாதாரணமாகவே போக்குவரத்து பிதுங்கும். மழைக்காலத்தில் சொல்லவே வேண்டாம்.

ஏழு குண்டுகள் வெடித்த அந்த மழை நாளில், காவல் துறைக்கு நேர்ந்த மிகப்பெரிய பிரச்னை, புலனாய்வு சொதப்பியது. வெடித்த பெட்டிகளில் மோப்ப நாய்களும் போலீஸாரும் போய் துப்புத் தேடியபோது, எல்லாம் கரித்தண்ணீராக இருந்தது. வெடித்துக் கருகி, தண்ணீர் விட்டுக் கழுவிய மாதிரி. அது ஆர்.டி.எக்ஸா, ஏ.பி.சி.டி.யா, ஈ.எஃப்.ஜி.ஹெச்சா என்று, எதை வைத்துக் கண்டுபிடிப்பது?

மிகவும் திணறிப் போனார்கள். ஒரு பக்கம், இறந்தவர்களையும் காயமடைந்தவர்களையும் மருத்துவமனைகளுக்கு எடுத்துச் செல்லவேண்டிய அவசரப் பணி. மறுபுறம், மக்களின் பதற்றத்தைத் தணிக்க வேண்டிய நிர்ப்பந்தம். இருக்கவே இருக்கிறது, பத்திரிகையாளர்களின் கேள்வித் தேள்கள்.

கொட்டை எழுத்தில் படியுங்கள். அன்றைக்கு மறுதினம், பத்திரிகையாளர்கள் கேட்ட எந்த ஒரு கேள்விக்கும் மும்பை காவல் துறைத் தலைவரால் பதிலே சொல்ல முடியவில்லை.

'யார் செய்தார்கள்? எப்படிச் செய்தார்கள்? என்ன குண்டு? எங்கே தயாரிக்கப்பட்டது? எப்படி மும்பைக்குள் ஊடுருவினார்கள்? செய்தது முஸ்லிம்களா? சிவசேனா விவகாரம் தூள் பறக்கிறதே, அதனுடன் சம்பந்தப்படுத்தி யோசித்தீர்களா? ரயில்வே அமைச்சர் லாலு என்ன செய்துகொண்டிருக்கிறார்? இன்னும் அறிக்கை ஏதும் வந்தபாடில்லையே? இறந்தவர்கள் குடும்பத்துக்கு என்ன நிவாரணம்? மகாராஷ்டிர முதல்வர் ஏன் இன்னும் வாய் திறக்கவில்லை?'

ம்ஹூம். பரப்பிரும்மமே என்று பரிதாபமாக அமர்ந்திருந்தார்கள் காவல் துறையினர். இது மக்களுக்கு மிகுந்த கோபத்தைக் கொடுத்தது. பத்திரிகைகள் கிழி கிழியென்று கிழித்தன. போதாக்குறைக்கு ரிச்சர்ட் பென்னெட் என்கிற பிரிட்டன் உளவுத்துறை நிபுணர் ஒருவர், நடந்த சம்பவத்தைக் கூர்ந்து பார்த்து, கண்டிப்பாக இதனை எந்த ஒரு 'இந்திய' தீவிரவாத இயக்கமும் செய்திருக்க முடியாது; இது வெளிக்கரம் நீட்டிய நாசக்கரம்தான் என்று சொல்லி வைத்தார்.

திட்டத்தின் துல்லியத்தைப் பாருங்கள். சற்றும் பிசகாத குறி. ஏழு குண்டுகள் சொல்லி வைத்த மாதிரி வெடித்திருக்கின்றன. நூற்றுக்கணக்கான உயிர்கள். எத்தனை வலுவான வெடிமருந்தைப் பயன்படுத்தியிருக்க வேண்டும்? இந்தியாவில் எந்த ஒரு இயக்கத்துக்கும் ஆர்.டி.எக்ஸ். வலு கிடையாது. அவர்கள் நாட்டுச் சரக்குக்காரர்கள். இது கண்டிப்பாக மேற்கிலிருந்து காஷ்மீர் வழியே உள்ளே புகுந்த குண்டுதான் என்று அவர் சொன்னார்.

சுற்றி வளைத்துப் பார்த்தால், அல் காயிதாவின் திட்டங்களுள் ஒன்றாக அதனை அவர் முன்னிறுத்த முயற்சி செய்வது புரியும். செப்டெம்பர் 11 சம்பவத்துக்குப் பிறகு, மாபெரும் இலக்குகள் என்று ஏதுமில்லாவிட்டாலும், சுற்றுலாத் தலங்களையும் மக்கள் நெரிசல் அதிகமுள்ள இடங்களையும் அல் காயிதா தொடர்ந்து குறிவைத்து வருவதைச் சுட்டிக் காட்டினார் ரிச்சர்ட் பென்னெட். பாலி மற்றும் இஸ்தான்புல் தாக்குதல்கள், லண்டன் குண்டு வெடிப்புச் சம்பவங்கள், ஸ்பெயினில் மாட்ரிட் நகரில் நிகழ்த்தப்பட்ட தாக்குதல் ஆகியவை இதற்கு முன்னுதாரணங்கள்.

இந்தியா போன்ற நாடுகள் அல் காயிதாவுக்கு எளிய இலக்கு. நேரடி கவனம் வேண்டாம். பொருள் அல்லது பண உதவி செய்தால் போதும். செய்து முடிக்க அடியேன் என்று ஆயிரம் பேர் தயாராக இருப்பார்கள். தவிரவும் லஷ்கர், ஆதிகாலம் முதல் அல் காயிதாவின் தலைமை சிஷ்ய இயக்கம். ஒண்ணும் ஒண்ணும் இரண்டாக மட்டுமே இருக்க முடியும் என்பது மேற்படி பிரிட்டன் புண்ணியவான் முதல் சகல உளவுத்துறை அதிகாரிகளும் போட்ட கணக்கு.

ஆனால், மும்பையில் லஷ்கர் இத்தனை சுருதி சுத்தமாக ஒரு காரியத்தைச் செய்ய முடியுமா? காஷ்மீர் என்றால் முடியும். அது ஹோம் கிரவுண்ட். மும்பை என்பது கொஞ்சம் பேஜார் அல்லவா?

அப்போதுதான் சிமியின் பங்களிப்பு இருக்க முடியுமா என்று ஆராயத் தொடங்கினார்கள். Students Islamic Movement of India என்பதன் சுருக்கமான சிமி, உத்தரப்பிரதேசத்தில் உள்ள அலிகரில் 1977-ம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட ஒரு மாணவர் இயக்கம். இந்தியாவை மேற்கத்திய நாகரிகத்தின் பிடியிலிருந்து விடுவிப்பதைத் தமது நோக்கமாகச் சொல்லிக் கொண்டு ஆரம்பித்தார்கள். ஜமாத் ஏ இஸ்லாமி ஹிந்த் என்கிற அமைப்பின் மாணவர் பிரிவாகத் தொடங்கப்பட்ட சிமி, தொடக்கம் முதல் பல சில்லறைக் கலவரங்களில் சம்பந்தப்பட்டு வந்திருக்கிற இயக்கம். யாசிர் அராஃபத் இந்தியாவுக்கு வந்தபோது, கறுப்புக் கொடி காட்டிப் பிரபலமானார்கள். (ஓஸ்லோ ஒப்பந்தத்துக்கு எதிர்ப்பு.) சுமார் ஐந்நூறு உறுப்பினர்களும் இருபதாயிரம் ஆதரவாளர்களும் அந்த இயக்கத்துக்கு உண்டு.

இந்தியாவில் எப்போது, எங்கே ஹிந்து - முஸ்லிம் பிரச்னை வந்தாலும் உடனடியாகத் தடை செய்யப்படும் இயக்கங்களின் பட்டியலில் எப்போதும் சிமி உண்டு. ஆனால், சரித்திரத்தின் அடிப்படையில் மிகப்பெரிய நாசகாரியம் என்று எதையும் சிமி செய்ததில்லை. அதாவது, அவர்களுக்கு அத்தனை பலம் கிடையாது.

ஆனால், எப்பேர்ப்பட்ட காரியத்தையும் எடுத்துச் செய்து கொடுக்கும் வல்லமை பொருந்திய இயக்கம் என்பது காவல் துறையின் கணிப்பு. இதனடிப்படையிலேயே, லஷ்கரின் வழிகாட்டுதலில் சிமி இந்தக் காரியத்தைச் செய்திருக்கலாம் என்று சந்தேகப்பட்டார்கள்.

இந்தச் சந்தேகாஸ்பதங்கள் எல்லாம் அரங்கேறிக்கொண்டிருந்த அதே சமயத்தில், திடீரென்று ஒரு புதிய கூத்து அரங்கேறியது.

லஷ்கர் இ கஹார் (Lashkar E Qahaar) என்கிற அமைப்பு, தாங்கள்தான் மும்பை குண்டு வெடிப்புக்குக் காரணம் என்று அறிவித்தது.

லஷ்கர் எத்தனை லஷ்கரடி என்று தலையில் துண்டு போட்டு உட்கார்ந்துவிட்டார் மும்பை கமிஷனர். முன்னதாக, மார்ச் 2006-ல் வாரணாசியில் நடந்த ஒரு குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு இதே பெயரில் யாரோ பொறுப்பேற்றுக் கொண்ட விஷயம் நினைவுக்கு வந்தது. அல் காயிதா, லஷ்கர் இ தொய்பா போன்ற இயக்கங்களுடன் தங்களுக்குத் தொடர்பு உண்டு என்றும், காஷ்மீர் மக்களின் கண்ணீரைத் துடைக்க வக்கற்ற இந்தியாவுக்கு ஒரு பாடம் சொல்லித் தரவே மும்பையில் வெடித்ததாகவும் அவர்கள் சொன்னார்கள்.

ஆனால், உளவுத்துறை இதனை அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. லஷ்கரின் பல்வேறு நாமகரணங்களை யோசித்துப் பார்த்து, இது கண்டிப்பாக லஷ்கராகத்தான் இருக்கமுடியும் என்று சொல்லிவிட்டார்கள்.

கவனிக்கவும். யூகம்தான். உருப்படியான ஆதாரம் என்று எதுவும் இன்றுவரை சிக்கவில்லை. ஆனால், சம்பவம் நடந்த உடனேயே லஷ்கர் தனக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்றும், நடந்த சம்பவத்தைத் தாங்கள் வன்மையாகக் கண்டிப்பதாகவும் ஓர் அறிக்கை வெளியிட்டது. கிட்டத்தட்ட அதே சமயத்தில், பாகிஸ்தான் அரசும் வருத்தம் தெரிவித்து ஓர் அறிக்கை வெளியிட்டது.

எங்கப்பன் குதிரில்தான் இருக்கிறான் என்று சொல்வது மாதிரி அமைந்தது இது.

யூகிக்கலாம், குற்றம் சாட்டலாம், கண்டனக் கூட்டங்கள் நடத்தலாம், குடியரசு, சுதந்திர தினங்களில் கொடி ஏற்றி வைத்து, தீவிரவாதிகளை எச்சரித்து வீர உரை ஆற்றலாம்.

ஆனால், உறுதியான ஆதாரங்கள் கையில் சிக்காதவரை உருப்படியாக ஏதும் சாதிக்க முடியாது என்பதுதான் விஷயம்.

நாடாளுமன்றத் தாக்குதல் விஷயத்திலும் சரி, இந்த மும்பை தாக்குதல் விஷயத்திலும் சரி. லஷ்கர் இ தொய்பா சம்பந்தப்பட்டிருப்பதாகக் காவல் துறையும் உளவுத்துறையும் குற்றம் சாட்டியதே தவிர, கைதானவர்களில் யார் ஒருவரும் லஷ்கரைச் சேர்ந்தவர்கள் இல்லை என்பதைக் கவனிக்கவேண்டும். மும்பை தாக்குதலில் தொடர்புடையவர்கள் என்று சந்தேகத்தின் அடிப்படையில், கிட்டத்தட்ட முந்நூறு பேரைக் கைது செய்தது காவல் துறை. அவர்களில் பெரும்பாலானோர் சிமி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அல்லது சிமி ஆதரவாளர்கள். ஆனால், யார் மீதும் இன்னும் குற்றம் நிரூபிக்கப்படவில்லை.

லஷ்கரைப் பொறுத்தவரை, அவர்கள் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் இருந்து செயல்படுகிறார்கள் என்பது மிக முக்கியமான பலம். வந்து வந்து குண்டு வைத்துவிட்டு ஓடிப்போய் ஒளிந்துகொள்ள மிகவும் சௌகரியமான பிராந்தியம் அது. தன்னளவில் பொருளாதார ரீதியிலும் ராணுவ ரீதியிலும் தன்னிறைவடைந்த இயக்கம் என்பதால், எத்தனை பெரிய காரியமாக இருந்தாலும் வெகு அலட்சியமாக அவர்களால் செய்து முடிக்க முடிகிறது.

தவிரவும், லஷ்கரின் தற்கொலைப் படையினர் இதில் எத்தனை பேர் உறுப்பினர்கள் என்று இன்றுவரை தெரியவில்லை. ஆனால், காஷ்மீரின் பல பகுதிகளில் லஷ்கர் மேற்கொள்ளும் பெரும்பாலான நடவடிக்கைகளுக்கு அவர்கள் தற்கொலைப் படை வீரர்களைத்தான் அனுப்புகிறார்கள். உயிரே முக்கியமில்லை என்று நினைக்கும் கூட்டம், வேறு எதற்கு முக்கியத்துவம் தரும்?

சமீப காலமாக சர்வதேச நிர்ப்பந்தங்களால் பாகிஸ்தான் அரசு அவ்வப்போது சில லஷ்கர் பிரமுகர்களைக் கைது செய்வதும் விடுவிப்பதுமாக ஒரு நல்ல நாடகத்தைத் தொடர்ந்து அரங்கேற்றிக் கொண்டிருக்கிறது. லஷ்கரின் தலைமை கமாண்டர் ஹஃபீஸ் முஹம்மது சயீதைக் கூட ஓரிரு முறை கைது செய்து உள்ளே வைத்தார்கள். ஆனால், ஒவ்வொரு முறையும் அவரது கைது சட்டவிரோதம் என்று சொல்லி நீதிமன்றம் அவரை வெளியே அனுப்பிவிடும்.

இதனை இன்னொரு நாடகமாகவும் பார்க்க முடியும். பாகிஸ்தான் அரசுக்கும் லஷ்கருக்கும் ஆகாது; ஒத்து வராது; லஷ்கர் தனியாகத்தான் செயல்படுகிறது என்று நம்பச் செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நாடகம்.

இன்றைய தேதியில் முஷரஃப் அளவுக்கு நெருக்கடியில் இருக்கிற தலைவர் என்று வேறு யாரும்

கிடையாது. முன்னே போனால் உதைக்கும். பின்னே வந்தால் கடிக்கும். எல்லாம் அமெரிக்காதான். அரசியல் ஸ்திரத்தன்மை என்பதன் ஸ்பெல்லிங் தெரியாத பாகிஸ்தான் அரசுக்கு, அனைத்துத் தரப்பினரையும் திருப்திப்படுத்தியாக வேண்டிய இருப்பியல் நெருக்கடி இருக்கிறது.

வேறு வழியில்லாமல் அவர்கள் தீவிரவாத முகாம்களின் மீது தாக்குதல் நடத்துகிறார்கள். கைது செய்கிறார்கள். பிறகு விடுவிக்கிறார்கள்.

இந்தக் கட்டுப்பாடு, நிர்ப்பந்தம் எல்லாம், இயக்கங்களுக்கும் தெரியும். நீ அடிக்கிற மாதிரி அடி, நான் இடிக்கிற மாதிரி இடிக்கிறேன் என்று பேசிக்கொள்ளாமல் போட்டுக்கொண்ட ஒப்பந்தம்.

இந்தியாவுக்கு வேறு வழிதான் என்ன?

உண்மையைச் சொல்வதென்றால் ஒன்றுமில்லை. லஷ்கர் உள்ளிட்ட எந்த ஒரு பாகிஸ்தான் தீவிரவாத இயக்கமும் இந்திய எல்லைக்குள் ஊடுருவாமல் இருக்க வேண்டுமானால் முதல் தேவை, உள்ளூரில் அவர்களுக்கு ஆதரவாளர்கள் இல்லாமல் இருப்பது.

குறிப்பாக காஷ்மீரில்.

ஆனால், நிலைமை முற்றிலும் இதற்கு எதிரானதாகவே இருக்கிறது. இந்தியக் காவல் துறையினரின் அவ்வப்போதைய அத்துமீறல்கள், எல்லைப்புற மக்களின் இருப்பியல் சிக்கல்கள், வேலை வாய்ப்பின்மை, பாதுகாப்பின்மை, சரணடையும் முன்னாள் தீவிரவாதிகளைப் போட்டுப் படுத்தி, பிச்சுப் பிடுங்குவது போன்ற பல அம்சங்கள் சேர்ந்துதான் அவர்களை இந்தியாவுக்கு எதிரான நிலை எடுக்க வைக்கின்றன.

காஷ்மீரில் நடக்கும் மனித உரிமை மீறல்கள் பற்றிய பல அறிக்கைகள் வெளியாகியிருக்கின்றன. ஒரு நாளைக்குக் குறைந்தது ஒரு சம்பவமாவது மக்கள் விரோத நடவடிக்கைக்கு உதாரணமாகக் கிடைக்கிறது. இது, எங்கோ தெற்கு மூலையில் இருந்து படிக்கிற நமக்கே வேதனை தரும்போது, காஷ்மீரிகளின் உணர்வைச் சற்று யோசித்துப் பார்க்கலாம்.

காஷ்மீர் மக்களின் மனத்தைக் கவரும் வகையில் இந்திய அரசும், காவல் துறையும், எல்லைப் பாதுகாப்புப் படையும் நடந்து கொண்டாலொழிய லஷ்கர் இ தொய்பா போன்ற இயக்கங்கள் காஷ்மீர் வழியே இந்தியாவுக்குள் ஊடுருவி குழப்பம் விளைவிப்பதைத் தவிர்க்கவோ, தடுக்கவோ முடியாது!